Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

(1889)
28உ

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சுஅ] யாழ்ப்பாணம்:- துன்முகிஞு மாசி மீ.. ககஉ வெள்ளிக்கிழமை (22 FEB. 1957) [இல-சரு]

# உலக சமாதானத்துக்கு இடையூறு

## அதிகார வேட்கையும், சுய நல வேட்டையும்

### மக்கள் நலனுக்கு மெய்ஞ்ஞானியரின் அருட் செயல்கள்

மக்கட் பிறவியினரின் மறுமலர்ச்சியின் பொருட்டு ஒற்றுமையையும் சமாதானத்தையும் உண்டாக்குமாறு உலகின் பல பகுதிகளில் காலத்துக்குக் காலம் மெஞ்ஞானியர் அவதார புருடர் தீர்க்கதரிசிகள் என்போர் தோன்றுகின்றனர். அகில உலகத்தினரையும் ஒரே குடும்பத்தினராக்கும் சகோதர மனப்பான்மையையும் அன்பையும் உண்டாக்கும் அரிய அறிவு விதைகளை அவர்கள் விதைக்கின்றனர்.

பரம்பொருளானவர் தம்முடைய அருட்செயல்களைச் செய்தற்கு மக்கட்பிறவியினரைக் கருவியாகக்கொள்கின்றார். தமக்கு முழுதும் ஒப்புக்கொடுத்தவர்களையே அவர் அவ்வாறு கருவியாகக் கொள்ளுகின்றார். அன்னவரே கடவுளின் உண்மைத் தன்மையை உணர்ந்து உலக மக்கள் மீது அன்பு மழையைப் பொழிகின்றார்கள். அவர்களாலேயே மக்கள் அறநெறியில் நடத்தப்படுகின்றனர்.

இத் தருணம் ஓர் அபாயமான நிலைமையில் உலகமிருக்கின்றது. மக்களின் கருமங்களில் முக்கியமான மாற்றங்கள் நிகழுகின்றன. மிக உயர்ந்த நிலையை அடைந்துவிட்டதாகக் கருதப்பட்ட இன்றைய மக்கட் பண்பாடு தவிடுபோற் பொடியாகிச் சிதைகின்றது. இக்கால நிலைமையைப் பார்த்து மக்கள் படிக்கவேண்டிய பெரும் பாடமொன்றுளது. இலௌகிக அதிகாரத்தைப் பெறுதற்கு உண்டாகும் அடக்க முடியாத எல்லையற்ற வேட்கையும், அத்தகைய அதிகாரத்தைக் கையாளுதலும் தற்பெருமையும் சுய நல வேட்டையும் பேரவாவும், தனிப்பட்ட மக்களுக்கிடையிலாயினென், சபைகள், சமூகங்கள், நாடுகளுக்கிடையிலாயினென், துன்பத்தையும் கிளர்ச்சியையும், சண்டையையும் உண்டாக்குகின்றன.

இவ்வாறு உலகிலே காண்கள் சண்டைகளை ஆராய்ந்து பார்ப்போமானால் அவை எல்லாவற்றுக்கும் அத்திபார ஆகாரமாய் நின்று அவற்றை ஆக்கி வெளிப்படுத்தும் காரணமொன்றுளதென்று காண்போம். பொதுவான உலோகாயத சக்தி வளர்ச்சியையும் அதனாலுண்டாகும் அதிகார வேட்கை, அதிகாரப் பெருமை ஆகியவற்றையும் எதிர்க்கும் ஆன்மசக்தியே இவற்றுக்கு மூலகாரணமாயமைகின்றது. கடவுள் தமது சர்வ வல்லமையாற் செயலாற்றும் சிறப்பை நாம் இதிற் காணலாம். இன்று நிகழும் வருத்தம் துன்பம் ஆகியவை நீங்கி உலகில் திருந்திய புது ஒழுங்கொன்று சர்வ வியாபகமான திருவருட் சிறப்பைத் துலக்கும் அறிவு முறையில் அமைதலை நாம் காண்டலாகும்.

இப் பெரும் பேறனது குறுகிய நோக்குடையவர்களாகிய அரசியல்வாதிகள், அரசியல்மேதாவிகள், அரசாங்கத் தூதுவர்கள் முதலியோரின் முயற்சியால் அடையத் தக்கதொன்றன்று. சுயநலன் சிறிதுமில்லாது அன்பு நிறைந்த உள்ளத்தினராய் விளங்கும் மெய்ஞ் ஞானியராலேயே இம் மாற்றம் உண்டாக்கத் தக்கது. சாதி சமயம், நாடு என்பனவாய் வரும் பந்தங்களில்லாதவர்களாகையினாலே அவர்களே இதைச் செய்யவல்லவராவர்.

இத்தகையமெய்ஞ்ஞானியரில் நாம் கண்டறியக் கூடிய பண்புகள் எவை என்று ஒருவர் கேட்கலாம். அவர்கள் எப்பொழுதும் சம நோக்குடையவர்களாயிருப்பார்கள் என்பதே அதற்கு மறுமொழியாகும். அஃதே அவர்கள் வாழ்க்கையின் உயிர்நாடியாயிருக்கும். அவர்கள் எல்லா உயிர்களிலும் இறைவனைக் கண்டு எல்லா உயிர்களையும் ஒரே மாதிரி நேசிக்கின்றார்கள். ஆகையினாலேயே அவர்களுடைய வாழ்க்கையின் நோக்கம் புடையதா யிருக்கின்றது. துன்புறுவோருக்கு உதவி செய்து ஆன்ம ஈடேற்றத் துறையில் அவர்கள் உயர்தற்கு உதவுதலே மெய்ஞ் ஞானியர் மீதுள்ள வாழ்க்கைப் பொறுப்பாயிருக்கின்றது. எல்லா உயிர்களிடத்தும் சம நோக்கும் ஆன்ம ஒற்றுமையுமுடையராய் அவர்களிருப்பதனாலுண்டாகும் சுய நல வேட்கையின்மைஅவர்களிற் காணக்கூடிய மற்றொரு பண்பாகும். நித்தியமான பேரின்பமுடைய வாழ்க்கையை அவர்கள் எப்பொழுதும் கண்ணுற்றபடியே யிருக்கின்றார்கள். ஆகையினாலே சாதாரண மக்களுக்குச் சாக்காடு உண்டாக்கும் பயம் அவர்களுக்கிலதாகின்றது. ஆன்மா நித்தியமானதென்றும் உயிர்வாழ்க்கை தெய்வத் தன்மை பொருந்தியதா யிருக்கின்றதென்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# இந்தியாவில்பொதுத்தேர்தல்

## மேன்மைதரும் நடைமுறை விதிகள்

நேர்மையான் தேர்தல் நடத்தி நம்நாடு பெயரும் புகழும் அடைந்திருக்கிறது. இந்த நற்பெயரை வருகிற தேர்தலில் நாம் குலைத்துவிடக்கூடாது இந்தத் தேர்தலையும் நேர்மையாக நடத்தி நமது நற்புகழை மேலும் உயர்த்திக்கொள்ள வேண்டும்.'

"தற்பொழுது தேர்தல் நிலைமை அமைதியாகவே இருக்கிறது. கட்சிகளும் அபேட்சகர்களும் தங்கள் தேர்தல் பிரசாரத்தைச் சிறப்பாகவும் கண்ணியமாகவும் நடத்தி வருகின்றனர். இது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. ஆயினும் சில தொகுதிகளில் சட்டத்துக்குப் புறம்பான நிகழ்ச்சிகள் நடைபெறுவதாகத் தேர்தல் குழுவுக்குச் செய்திகள் கிடைத்திருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

"எவ்வித அச்சமும் பாரபட்சமும் இன்றிச் சட்டத்தை நிலைநிறுத்துவதற்காக ஒவ்வொரு மாகாணத்திலும் பாடிகாவலரும் நீதிபதிகளும் விழிப்புடன் இருந்து வருகிறார்கள். எனவே ஒவ்வொரு அபேட்சகரும் தங்கள் ஊழியர்களையும் ஆதரவாளர்களையும் கீழ்க்கண்ட சட்டத்துக்குப் புறம்பான மல் இருக்கும்படி கேட்டுக் கொள்ளவேண்டும்.

1 போட்டி அபேட்சகரின் கூட்டங்களில் குழப்பம் செய்தல்.

2 ஆள் மாருட்டம் செய்து வாக்களித்தல்.

3 வாக்காளர்களுக்கு இலஞ்சம் கொடுத்தல்.

4 வாக்காளரையோ அல்லது மற்றவர்களையோ பயமுறுத்தல்.

5 வாக்குச் சாவடிக்கு 100 யார் தூரதிற்குள் வாக்காளர்களிடம் ஆதரவு தேடுதல்.

6 வாகனங்களில் வாக்குச் சாவடிகளுக்கு வாக்காளர்களைக் கொண்டு வருதல்.

வாக்குப் பதிவு நாளன்று தங்கள் குடும்பத்தினரைத் தவிர மற்றெந்த வாக்காளர்களையும் யந்திர உந்து வண்டிகளில் அழைத்து வரக்கூடாதென்று சொந்தக்காரர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதைமீறி நடப்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இவ்வாறு சட்டத்தை மீறுபவர்கள் பாடிகாவலரால் முன் அறிவித்தலின்றிக் கைது செய்யப்படுவார்கள். அவர்களுக்கு ரூபா 250 அபராதம் விதிக்

அரசியல் அலை

# மந்திரி சபைக்குள்ளே மனக் கசப்பா?

## பதில்அமைச்சராய்ப் பதவி வேண்டாம் என்கிறார்

### பாராளுமன்றக்காரியதரிசி திரு. இரியகொல

பண்டாரநாயக அமைச்சு அவை என்றால் பலவித மனப்பான்மைக்கு ஒரு எடுத்துக் காட்டென்று அரசியல் ஆராய்ச்சியாளர்கள் அடிக்கடி கூறுவார்கள். உணவு மந்திரியின் ஊக்கம், கல்விமந்திரியின் கருத்து, தொழில் மந்திரியின் சுரண்டல், சுகாதாரமந்திரியின் சுறுசுறுப்பு என்று இந்த வகையிலே அரசியல் வண்டி அங்கும் இங்குமாக ஆடிக்கொண்டு ஓடமுடியாது தளம்புகின்றது.

இதற்கிடையில் திரு. இரியகொல என்ற பாராளுமன்றக் காரியதரிசி வெளி வெளியாய்ப் பல முறை வேண்டுகோள் விடுத்தும் பிரதமர் மந்திரிப் பதவியை அன்னாருக்குதவும் நிலைமை ஏற்பட்டபாடில்லை. இடைவேளையிற் பதிற் கடமையாற்றுங்கள் என்று பிரதமர் கேட்டதையும் திரு. இரியகொல ஏற்க முடியாதென தட்டிவிட்டாராம்.

இதற்கிடையில் முன் பல நாள் இடதுசாரிக் கட்சிகளின் இதயத்தைக் கவர்ந்த திரு. இலங்கரத்தின இப்பொழுது அந்தத் தலைவர்களை அடக்கும் 'வேலைநிறுதத் தூண்டுதலை' விலக்கும் சட்டத்தைக்கொண்டு வரப் போகின்றாராம். இது மந்திரியார் பிலிப்பு குணவர்த்தனவுக்கும் பிடிக்காதே?

நாட்டிலே கட்சிகள் வேறுபாடல்ல, சாதிகளின் வேற்றுமையல்ல; இந்த மந்திரிமார்களின் மனவிபரீதமே மிக மிக வில்லங்கமானதாய் விளைந்து வருகின்றது. இதைத்தான் மக்கள் ஐக்கிய முன்னணி என்று அழகாய் அலங்காரமாய் அழைக்கின்றார்கள்!

#### கொழும்புமா நகரசபைக் கொள்கை

இலங்கை எல்லாமொழிகளுக்கும் பொதுவானது என்ற உண்மையிலும் பார்க்கப் பன்மடங்கு உண்மையானது, கொழும்பு மாநகரம் எல்லா மொழிகளுக்கும் பொதுவானதென்பது. இந்த உண்மையை நடைமுறையிற் கொண்டுவந்தார். இப்பொழுதுள்ள சபை முதல்வர் திரு. சுகததாசா சீனப் பிரதமருக்குச் சிங்களத்திலே உபசார உரை வழங்காமல் எல்லோருக்கும் பொதுவான மொழியாகும் ஆங்கிலத்தில் வரவேற்பை நிகழ்த்தினர். இப்

## எங்கள் அறிவித்தல்

=0=

மாசி 17-ந் திகதி வியாழக் கிழமை(28-2-57)சைவப் பிரகாச அச்சுயந்திரசாலையும் இந்துசாதனக் காரியாலயமும் மகாசிவராத்திரியின்பொருட்டு மூடப்பட்டிருக்கு மென்று அன்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

—அதிபர்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாமரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். துர்முகி ௵ மாசி ௴ கக உ வெள்ளிக்கிழமை

## வள்ளுவரை வாழ்த்துவது மட்டும்போதுமா?

மாசிஉத்திரத்தில் வள்ளுவனர் மகாஞானியைவாழ்த்தும் வைபவம் தமிழ் நாடெங்கும் நடைபெற்றது. வாழ்க்கைச் செம்மைக்கும் வண்மைக்கும் வழிவகுத்த நூல் திருக்குறளே யென்றும் தெய்வநெறி நிற்கும் ஒழுக்க வழி கற்பித்த உத்தமர் திருவள்ளுவ நாயனரென்றும் வாயார வாழ்த்திய வண்ணம் மாநாடுகளிற் சொற்பெருக்கப்பெற்றன. இவ்வாறே ஆண்டுக்காண்டு வள்ளுவர் வான் புகழை எடுத் துரைத்து வருவது வழமையாய் விட்டது. முன்னோர் எங்களுக் குரைத்த மூதுரைகளைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்க்கை முறையைச் செம்மைப்படுத்துவதா—வாழ்த்துரை பகருவதா எது பேரறிஞர்களை நினைவு கூரும் நெறியென்று கேட்கின்றோம்? எக்காலத்துக்கும் எந்நாட்டிற்கும் எவர்களுக்கும் இன்றியமையாத வாழ்க்கை ஒழுக்க நூல் திருக்குறள் என்று பன்முறை பண்பாய்ப் பேசி விட்டால் வள்ளுவ ஞானம் உலகிற் பரவிவிடுமா? ஆகவே வள்ளுவனரின் தூய நாமத்தைத் தாங்கும் மன்றங்கள் சங்கங்கள் பொய்யா மொழி ஒழுக்க விதிகளை மக்கள் பின்பற்றி வருதற்குரிய வழிவகைகளைத் தேடுவதுதான் அத்தியாவசியமாய் வேண்டப்படுவதொன்று.

தமிழகப் பண்பாடு யாதென்றறிய வேண்டின் 'அறத்தினூங்காக்கமில்லை' என்ற பொன்மொழிகளிற் பொதிந்திருக்கும் பொய்யாமொழி நன்கு புலப்படுத்தும். இந்த அறநெறி ஒழுக்கம் இந்நாட்டில் எவ்வகையில் அமைந்திருக்கிறதென்பதை ஆராய்ந்து பார்க்கின் வள்ளுவர் நாள் வழுத்துவதால் மக்கள் அடைந்த பயன் இவ்வளவென்றொருவாறு அநுமானிக்க முடியும்.

அரசியல் பிழைத்தமையாலே தமிழ்பேசும் இனம் துன்புற்றிருக்கின்ற துண்மை. இந்த நிலையிலே அரசியற் செங்கோன்மையை மீண்டும் வரவழைப்பதற்கு மக்கள் நேர்மைத் திறத்தினுல் அறத்தின் ஆற்றலினுல் உழைத்தலே தமிழகச் சால்புக்குப் பொருத்தமானது. **'நன்மையும் தீமையும் நாடி நலம் புரிந்த தன்மையான் ஆளப்படும்'** அரசை அமைக்க மக்கள் மனத்தூய்மையும் மொழிச் செம்மையும் செயற் சீரும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டப்படும். தெளிவுடையாராய் அறிஞர்களாய் ஒழுக்க சீலராயுள்ளவர்கள் தலைமை நிலவுதல் வேண்டும். **அன்பு** அறிவு தேற்றம் அவாவின்மை ஆகும் இந்நான்கும் நன்குபொருந்தியவிடத்திலேதான் தெளிவுண்டாகும். 'ஒழுக்கமுடையவர்க் கொல்லாவே தீயவழுக்கியும் வாயாறசொலல்' என்றாங்கு சொல்விழுக்குப்படாதநாகாக்கும் அறிஞர்களே முன்னணியில் நின்று வழிகாட்டும் திறனுடையர் ஆவர். ஒழுக்கத்தால் உயர்ந்தவர்கள் தலைமையில் உள்ள உலகம் நல்ல சீலமுடையதாயிருக்கும்.

தமிழகம் வள்ளுவ ஞானத்தின் வழி வழி வருகின்றதா? அவ்வாறாயின் அழுக்காறும் அவாவும் வெகுளியும் இன்னுச்சொல்லும் இன்னபிறவும் மலிந்து மக்கள் எக்கட்சி பலங்கொண்டது எத்தலைவன் ஆற்றல் மிகுந்தவன் என்ற இறுமாப்பில் வீண்பொழுது கழித்து உய்யும் நெறியை மறந்து அல்லற் படுவார்களா? வாழ்க்கை ஒழுக்கமே அரசியல் ஆற்றலுக்கு ஆதாரமாகும். வள்ளுவனரைவாழ்த்துவதிலும் வள்ளுவர் வகுத்த வழியில் நின்று வாழ்ந்து வருவதே மேலானது. இந்நெறி நிற்கும் மக்கள் இறைவழிபாட்டில் இன்றியமையாது நிற்பர். அவர்களுக்கு அல்லல் என்செய்யும்? வாழ்ந்த வழி காட்டும் வள்ளுவர் தொண்டர்கள் தோற்றமாட்டார்களா?

## வாழ்க்கை வானில்

—வளர்பிறை

### வகுப்புவாதப் பகிஷ்காரம்!

சிங்களச் சிறீயைப் புகுத்தி வகுப்புவாத அரசியலை நடத்தும் ம. ஐ. மு. பிரதமர் தமிழர்களின் வியாபார நிலையப் பகிஷ்கார இயக்கத்தையும் பலமாகக் கண்டிக்கின்றாராம். பாலுக்கும் காவல் பூனைக்குந் தோழனைப் போன்றுவரும் பிரதமர் 'பிள்ளையைக் கிள்ளி விட்டுத் தொட்டிலை ஆட்டும் அரசியல் ஆட்டம் விநோதமாக இருக்கின்றது. தொட்டதெல்லாவற்றுக்கும் ஐ.தே.க. மறுபடியும் ஆதிக்கம் பெறப் போகின்றதென்ற சாட்டைச் சொல்லிக்கொண்டு ம. ஐ. முவும் பொதுவுடைமைக் கட்சியினரும் சனநாயகத்துக்கு மாறான வழிவகைகளில் இறங்குவதைப் பிரதமர் ஏன் கண்டிக்கின்றாரில்லை.

### பிரசாஉரிமைச்சட்டம் பேச்சளவிலா?

பிரசாஉரிமைக்கு மனுப்பண்ணும் இந்தியர்கள் 600 பேரில் ஒருவருக்கே அநுமதி கிடைப்பதாகவும் ஏனைய ஐந்நூற்றுத்தொண்ணூற்றொன்பதின்மரின் மநுக்கள் நிராகரிப்படுவதாகவும் புள்ளி விபரங்கள் அறியத் தருகின்றனவென்று செய்தி ஒன்று கூறுகிறது. நியாயமான வகையில் நியாயம் வழங்கும் ம. ஐ. மு. எவ்வளவுக்கு ஐ.தே கட்சியிலும்பார்க்கச் சிறுபான்மையினருக்குப் பாதகமாய்க் காரியம் பார்க்கின்றதென்பது இப்பொழுது தெளிவாய்த் தோற்றுகின்றது.

# மகாசிவராத்திரி விரதம்

## அனுட்டித்தல் இன்றியமையாது வேண்டப்படுவது

இது மாசிமாதக் கிருஷ்ண பக்கச் சதுர்த்தசியில் சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாகும். இந்நாளில் உபவாசமிருந்து இரவில் நான்கு யாமமும் சிவபூசை செய்து வழிபாடாற்றுதல் சிறந்த முறையாகும். சிவபூசை செய்யாதவர்கள் திருக்கோயில்களுக்குச் சென்று அங்கே சிவசரிதங்களைக் கேட்டும் திருப்பாடல்களைப் பாடியும் நித்திரை செய்யாது வழிபாடாற்றுவர். நான்கு யாமமும் நித்திரை செய்யாதிருக்க முடியாதவர்கள்பதினைந்து நாழிகை வரையும் விழித்திருந்து வழிபாடாற்றுவர். உபவாசமிருக்க இயலாதவர்கள் நீராகாரங்களையுண்டும், பால்பழங்களையுண்டும், விரதானுட்டானஞ் செய்வர். விரதங்களுள்ளே மேலானதாகிய இச்சிவராத்திரி விரதம் சைவமக்கள் யாவரும் அனுட்டிக்க வேண்டியதொன்றாகும்.

சிவராத்திரிவிரத மகிமைகளை விளக்கும் கதைகள் பலவுள. அவற்றுள்ளே பிரம விட்டுணுக்களின் கதை பெரும்பாலும் பேசப்படுவதொன்றாகும். அக்கதை உணர்த்தும் பொருள் எங்கள் வாழ்க்கையில் நாள்தோறும் மனத்தி லிருத்தப்படவேண்டிய தொன்றாகலின் சிவராத்திரியில் விசேடமாக நினைவுகூர வேண்டியதாகுமென்பது சொல்லாமலேயமையும்.

படைத்தற் கடவுளாகிய பிரமாவும் காத்தற்கடவுளாகிய விட்டுணுவும் தத்தம் தொழில்களைக் கண்டு அளவிலா இறுமாப்புக்கொண்டனர். ஒவ்வொருவரும் தாமே முழுமுதற் கடவுளெனச் சாதிக்கத் தொடங்கினர். இருவருக்குமிடையிற் பெருஞ் சமர் தொடங்கியது, சண்டை வளர்ந்து தாங்கொணு நிலைமை யடைந்த சமயத்தில் இருவருக்கு

தொடர்ச்சி 5-ம் பக்கம்

## உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராமகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 24—2—57 —— 2—3—57. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

இந்த வாரம் கண் நோய்களுக் கிடமுண்டு. குடும்பக் கருமங்கள் சிறிதும் நல்லா யிருக்கமாட்டா சண்டைகள் தொடுக்க விரைந்து செல்ல வேண்டாம். பணநெருக்கடிகளுக்குமிடமுண்டு.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

ஒரு நல்ல வாரம். ஆனுல் முதல் இரு நாட்களையும் கவனமாய்க் கழிக்கவும். வார மிகுதி மிக நல்லாயிருக்கும். தனலாபமும் குடும்பசமாதானமும் நிச்சயம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.

செவ்வாய் புதனும் வியாழன் காலையும் தவிர ஒரு நல்ல வாரம். உம்முடைய உத்தியோக கருமங்கள் அல்லது வியாபார கருமங்களுக்கு வாரமிகுதி நன்றாயிருக்கும். எதிரிகளுக்கு அழிவும் புகழும் நிச்சயம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

கருமங்கள் இந்த வாரம் குழப்பமாயிருக்கும். உம்முடைய கருமங்கள் பலவற்றில் நீர் மிகுந்த எதிர்ப்பையும் கண்டனங்களையும் முன்னிடவேண்டி வரும் இரகசியப்பகைவரைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும். வியாழன் பிற்பகல் வெள்ளி சனி எல்லாவற்றிலும் மிகப் பழுதானவையாயிருக்கும்.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.

உமக்கு மனச் சமாதானமிருக்கமாட்டாது, பிதாவழி இனத்தவர் உமக்குச் சில இடைஞ்சல்களை உண்டாக்கக்கூடும். செலவு வழக்கத்திலும் மிகக்கூடுதலாயிருக்கும். ஆனுல் அவற்றைச்சமாளிக்கவேண்டியதுபெறுவீர், வார இறுதி சில நல்ல புதினங்களைத் தரும்,

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

உம்முடைய கருமங்களை இந்த வாரம் நீர் இலகுவாக ஒழுங்கு பண்ணக்கூடியதாயிருக்கும். எதிர்ப்பு நீங்கும். பணத்துறையிலும் நல்ல வாரம், ஆனுல் சுகவீனங்களுக்கிடமுண்டு.

**துலாம்** சித்திரை 3 4ம், பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

இரகசியப் பகைவர்மூலம்இந்த வாரம் தொந்தரவுகளுக்கிடமுண்டு. தேக சுகமும் நல்லாயிராது. ஒன்றையும் புதியதாய்த் தொடங்கவேண்டாம். குடும்பத் தொந்தரவுகளுக்கும் அவமானங்களுக்குமிடமுண்டு,

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம். கேட்டை.

இந்த வாரம் எதிர்ப்பு நீங்கும். உம்முடைய கருமங்களில் நண்பர் அதிக உதவியாயிருப்பர், எதிரிகளுக்கு அழிவும் புகழும் நிச்சயம், ஆனுல் தேகசுகம் சிறிது காலத்துக்கு நல்லாயிருக்கமாட்டாது.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம், 1ம் பாதம்.

இந்த வாரம் வயிற்றுக் குழப்படிகளுக் கிடமுண்டு. வரவு செலவைச் சமாளிக்கமாட்டாது நீர் வருந்துவீர். வசை மொழி பரப்புவோர் உமக்குச் சிறிது கோபத்தை யுண்டாக்கக் கூடும். கந்தோரிற் சண்டைகளைத் தவிர்க்கவும்.

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

ஒரு நல்ல வாரம். வியாபாரம் மிகுந்த சித்தியடையும். உம்முடைய நண்பர் மூலம் நீர் அதிகம் நன்மையடைக்கூடும். காணிகள் காணிப் பொருள்கள்மூலம் இலாபங்கள் நிச்சயம்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

சுகவீனங்களுக் கிடமுண்டு. இடைஞ்சல்களை நீக்குவதில் நீர் மிக வருத்தப்படுவீர். கந்தோரில் தொந்தரவுகளுக்கும் நண்பர்களுக்கிடையிற் பிழை எண்ணங்களுக்குமிடமுண்டு. ஆனுல் நீர் உம்முடைய பகைவரை வெல்லக் கூடியதாயிருக்கும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

சண்டைகள் தொடுக்க நீர் முந்துவீர். பிதாவழி இனத்தவர் உமக்குச் சிறிது கோபமூட்டக் கூடும். பணத்துறையில் நல்ல வாரம். சமூக சித்தியும் புகழும் நிச்சயம்.

# மாணக்கர் மதிவள மன்றம்

"தமிழ் வேள்"

### இடக்கண் ஈந்த எழிலேகம்பன்

அங்கு நின்று திருவேகம்பஞ் சென்று—பார்வை தந்தருளுமாறு பரமனை வேண்டினார். பரமன் இடக்கண் ஒளிபெற அருள்செயப் பரவசமடைந்து "ஆலந்தானுகந்தமுது செய்தானை" என்னும் பதிகமருளிச் சிலகாலிருந்து புறப்பட்டுத் தொண்டை நாடுகண்டு சோழநாடடைந்தார்.

### வலக்கண்ணளித்த வன்மீக நாதர்

அங்குள்ள திருவாவடுதுறையிற் "கங்கைவார் சடையாய்" பாடித்—திருத்துருத்தியிற், தமக்குண்டான தேகநோய் நீங்கப்பெற்று "மின்னுமா மேகங்கள்" என்னும் பதிகமருளினார். பின்னர்த் திருவாரூர் சென்று தேவாசிரிய மண்டபத்தை - (இது, திருவாரூர்க் கோயிலின் முற்பக்கத்திலிருக்கும் ஆயிரங்கால் மண்டபம். திருத்தொண்டர் திருக்கூட்டம் நிறைந்துறையும் மகிமை வாய்ந்தது. வணங்கிச் சந்நிதானத்திலே போய் விழுந்து "மீளாவடிமை யுமக்கேயாளாய்" எனப்பதிகமருளினார். இறைவனருளால் வலக் கண்ணும் பிரகாசமடைந்தது. இரு கண்களாலும் கண்ணார-மனமார இறைவனைத் துதித்துக் கொண்டு அங்கு இருந்தார்.

### அவன் அவள் அது

திருவொற்றியூர்ச் சங்கதி முழுவதும் தெரிந்து விட்டது பரவையாருக்கு. ஒருபுறம் துக்கம். மறுபுறம் பெரிய கோபங்கொண்டார். சமாதானத்திற்குச் சென்றனர் சிலர். நிலைமை நெருக்கடியாய் விட்டது. சமாதானம் சரிவரவில்லை. திரும்பி வந்து நாயனருக்கு நவின்றனர் சங்கதியை. சமாதானம் பேசுவதிற் கரைகண்ட சிலரை மீண்டும் அனுப்பினர். சென்றவர்கள் தங்கள் வித்தைகளையெல்லாம் காட்டிப் பார்த்தனர். காரியம் பலிக்கவில்லை. கோபம் அதிகரித்தது பரவையாருக்கு. "மேலும் அவரைப்பற்றிப் பேசினால் உயிரை விடுவேன்" என்றார். அவ்வளவுதான் போனவர்கள் பூமணத்தோடு மீண்டனர். பரவையின் ஊடலைத் தீர்த்து அருள் புரியுமாறு இறைவனை வேண்டினார் சுந்தரர்.

ஞானிகள் திரிகரணங்களாற் புரியுஞ் செயல்களைத் தஞ்செயலாகக் கொள்பவர் சிவபெருமான். நாயனரது பிராரத்தத்தைத் (பிராரத்தம்–அநுபவிக்கப்படுகின்ற ஊழ்வினை) தொலைப்பிக்கும் பொருட்டும் நம்மவர்க்குப் புலப்படும் பொருட்டும் அங்ஙனஞ் செய்பவர் ஆவர். அங்ஙனஞ் செய்தல் அவன், அவள், அது முன்னிலையாம்.

அவன் — அவள் — அது முன்னிலையாம் என்பது. அதாவது — ஆணாகவும் பெண்ணாகவும் அவையல்லதாகவும் நிற்கின்ற உயிர்களும் உலகமும் முதலான யாவும் முன்னிலைப்பட்டு இறைவனது ஐந்தொழில்களையும் காணகிற்பதும் — அவை முன்னிலையாக ஐந்தொழில்களையும் செய்பவர் தாமேயென்பதும் ஆகும். ஆதலின் திருமாலும் பிரமனுங் காணாத சேவடிகள் பூமியிற் தீண்டக் காட்சியருளினார். சுந்தரர் விழுந்து வணங்கி எழுந்து நிலைமையைக்கூறினார். இறைவன் எல்லாம் அறிபவர் ஆதலின் "தோழனே! துன்பமொழி! தூது செல்வோம்" சென்றார். பூத கணங்களுடன் ஆதிசைவர் வடிவு கொண்டு பரவையார் வீட்டையடைந்தார்.

### பரவையே கதவை விரைவிற் திறவாய்!

வீட்டுக் கதவு பூட்டப்பட்டிருந்தது. நடுச்சாமம். "பரவையே கதவைத் திற" என்றார். "கோயிற் பூசை புரியும் ஆதிசைவர் குரல் போலப் பட்டது பரவைக்கு. திறந்தார் கதவை. ஆதிசைவர்தான். "வாருங்கள்! ஏது? இந்த அகால நேரம்!" எனக்கேட்டார்.

கடவுள்: மறுக்காது செய்வையோ?

பரவை: இயலுமாகில் செய்வேன்.

கடவுள்: சுந்தரமூர்த்தி இங்குவர நீ உடன்படல் வேண்டும்.

பரவை: முடியாது. நன்றாயிருக்கிறது உமது பெருமை. சங்கிலியினாலே கட்டுப்பட்டவருக்கு இங்கு என்ன சார்பு. இது உமது பெருமைக்குத் தகாது. போய்விடும் என்றார். இறைவன் குறுநகை புரிந்து கொண்டு சுந்தரரிடம்சென்றார்.

•

### ஊடல் நீர்த்து உதவிய தூதன்

இறைவனைக்கண்ட சுந்தரர் அவரது நகைப்பைக் கண்டு காரியம் பழம் எனக் கருதினார். "போய்ப் பேசினேம், அவள் மசியவில்லை" என்றார் இறைவன். மனமுடைந்த சுந்தரர்," அன்று ஆட்கொண்டதென்னை? முடியாது—அருள் புரியீராயின் உயிர் போய்விடும்' என்றார். "பொறு, இன்னும் முயன்றுபார்ப்போம்'' என்று மீண்டும் எழுந்தருளினார். இங்ஙனமாக முன்னர் வந்தவர் இறைவனே யென்று பல குறிகளான் உணர்ந்து விட்டார் பரவையார். அச்சமுங் கவலையுங்கொண்டு வாயிலையே பார்த்துக்கொண்டு இருந்தார். பரமன் வரவைக் கண்டதும் பரவசமடைந்தார். திருவடிகளில் விழுந்து வணங்கினார். "சுந்தரன் அனுப்ப மீண்டும் வந்தோம்; மறுக்காதே. ஊடலினால் அவன் உருகிப் போனான். உடன்படு" என்றார். "தேவரீர் திருவுள்ளம் இதுவானால் உடன்படாமல் யாது செய்வேன்" என்றார். "நன்று சொன்னாய் என்றருளி நாதன் சுந்தரரிடம நண்ணினார்.

### பிரிந்தவர் கூடினாற் பேசவும் வேண்டுமோ?

என்ன பதில் வருமோ? என ஏங்கிக்கொண்டிருந்தார் சுந்தரர். வந்த இறைவன், "சுந்தரா! ஊடலைத் தணித்தோம்; உடனே போகலாம்" என்றார். திருவடிகளை விழுந்து வணங்கினார் சுந்தரர். இறைவனார் மறைந்தார். விழுந்த சுந்தரர் எழுந்து ஓடினார் பர

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

## குருபூசை பற்றியுமா வேற்றுமைக் குதர்க்கம்?

————0————

திருவள்ளுவர் திருநாள் பற்றிப் பல வாதங்கள் நீண்டகாலமாக நடைபெற்றன. அவருடைய திருநாள் மாசி உத்திரமோ வைகாசி அனுடமோ என்பது பலர்க்குத் தெரியாது. புது இயக்கம் ஒன்று தோன்றி இரு கட்சியாய் நடைபெற்று வருகின்றது. இந்தியாவிலே திருமயிலாப்பூரிலுள்ள வள்ளுவர் கோயிலில் இற்றைக்குப் பல வருடங்கட்குமுன் மாசி உத்திரத்திலேயே திருநாள் கொண்டாடி வந்தார்கள். பின் ஏதோ ஒரு காரணத்தால் வைகாசி அனுடத்தில் கொண்டாட வேண்டுமெனத் தீர்மானித்தார்களாம். இந்த மாற்றத்துக்கு சுவாமி வேதாசலம் அவர்கள் காரணம் எனக் கூறப்படுகின்றது. காலத்துக்குக் காலம் கொள்கைகள் மாறுபடுகின்றன என்பது பலருக்கும் தெரிந்த விஷயமாகும். மாதவச் சிவஞான சுவாமிகளுக்குப் பின் இதுவரை தமிழ் நாட்டில் ஒரு மகான் தோற்றவில்லையெனலாம். அந்த மகான் வழி நில்லாது மாறுபாடான வெற்றுக் கல்வியாளர் தங்கருத்தை நிலைநாட்டப் புகுவது முயற்கொம்பை உருவாக்குவதாகும். இக் காலத்தில் சிலர் புகழ் விரும்பி, பெரியோர் கருத்துக்கு மாறாக, புதிய வழிகளில் புகுவது பெரும்பிழையாகும். இன்னும் சிலர் வறுமை, குடும்பத்தொல்லை புத்திரரின்மை, முதலாய பல காரணங்களினால் போலித்துறவு கொள்வதுண்டு. இப்படியான துறவிகள் பலர் இந் நாட்டிலும் தாய் நாட்டிலும் இருக்கிறார்கள். அதுபோல சில இலௌகிகர்கள் தம் பெயரும் தமிழகத்தில் பரவவேண்டுமென நினைத்து நாவலர் கருத்தை மறுத்துரைத்து விழாக் கொண்டாட விரும்புகின்றனர். இற்றைக்கு இருபது வருடங்கட்கு முன் யாழ்ப்பாணம் வைதிக சைவநாடாயிருந்தது. இதனால் எந்தக் கொள்கையும் தலைகாட்ட விடாது தடுத்து நின்றது. இப்போது வைதிக சைவம் குன்றுதலும், பௌத்தம் தலையெடுக்கிறது. இதனால் மக்கள் விவேகம் குன்றி, ஆத்மீக உணர்வு குன்றி, வெற்றுக் கல்வியறிவோடு தம் கருத்துக்களை நிலை நாட்டத் துணிகின்றனர். இது கருங்கல்லில் நார் உரிப்பதுபோலாகும். திருவள்ளுவநாயனார் குருபூசை மாசி உத்திரத்திலேயே என்று ஆறுமுக நாவலர் அவர்கள் சொன்னார். இதனைத் தமிழகத்துச் சைவப்பெரியார் திரு. கா. சுப்பிரமணியம் பிள்ளை, திருமயிலை சைவப் பெரியார் திரு. செ. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை, திருநெல்வேலி ஜில்லா திரு. சிவசூரியநாராயணபிள்ளை முதலியோருடன் பிற பலர் இந்நாளையே ஆதரித்தனர். ஆதலால் தமிழ்ப் பெருமக்கள் யாவரும் வள்ளுவர் திருநாள் மாசி உத்திரமென்பதை மனதில் வைத்து வருடந்தோறும் குருபூசை செய்து சிவநெறியை வளர்ப்பார்களாக.

— சிவனடியான்

# தாயாரின் தாலாட்டு

## இயற்கை அன்னை ஆளும் எழிலான முறைகள்

ஸ்ரீ வ. குகசர்மா

இயற்கை பூவுலகத்திலுள்ள உயிர்களை வளர்க்கும் தாய். அவ்வாறு வளர்க்கும்போது அவள் நம்மைத் தாலாட்டுகிறாள், உணவூட்டுகிறாள், கோபம் கொள்ளுகிறாள், அன்புடன் அணைத்துக்கொள்ளுகிறாள், இவற்றைத்தான் புலவர்கள் காவியங்களாகப் பாடியிருக்கிறார்கள்.

குழந்தை நித்திரை வந்தவுடன் தாய் தன்னைத் தாலாட்டி நித்திரை கொள்ளச் செய்யவேண்டுமென விரும்புகிறது. அந்த நேரத்தில் குழந்தை வேறு எவ்வித இனிய கீதமாக இருந்தாலும் விரும்பமாட்டாது. தாயின் குரலால் தாலாட்டப்படுவதையே அது விரும்பும். எனவே தாலாட்டுதல் ஒரு கலையாய் விட்டது. சில பெண்கள் தங்கள்குழந்தைகளைத் தாலாட்டும்போது நமக்கும் இளமைப் பருவத்து நினைப்பு வரும். நமது மனம் மகிழ்ச்சியால் துள்ளும். நம்மையும் யாரும் தாலாட்டினாலோ என்று எண்ணுவோம். நமது தாயாருக்கு முன்பாயிருந்தாலென்ன அல்லது இயற்கையன்னையின் முன்னென்றாலும் யாம் எப்போதும் குழந்தைகள்தாம். திருவீழிமிழலை என்கின்ற இடத்தில் பெண்கள் தாலாட்டும் ஓசை கேட்டு விண்ணவர்கள்கூட வியப்படைகின்றார்கள் என ஞானசம்பந்தர்,

"பண்ணமருமென் மொழி [யார்
பாலர்களைப் பாராட்டு
[மோசை கேட்டு
விண்ணவர்கள் வியப்
பெய்தி விமானத்
[தோடும்
இழியும் மழலையாமே"

என்னும் அடிகளிற் கூறுகிறார்.

திருச்செந்தூர் முருகப்பெருமான் கோயில்கொண்டருளும் இடம். அது கடற்கரையின்கண்ணே உள்ளது. கடலில் உள்ளகருக்கொண்ட சங்குகள் அலைகளால் எற்றுண்டு அலையும். அலைச்சல் தாங்க முடியாமல் புலம்பிக்கொண்டு ஊர்ந்து சென்று தடாகங்களில் உள்ள தாமரை மலராகிய படுக்கையை அடையும். கருக்கொண்டவை இயல்பிலே களைப்புடையன. மேலும் கடலினால் அலைக்கப்பட்டவை. ஆகையால் அயர்ந்து தூங்க ஆரம்பிக்கின்றன. இயற்கையன்னை தாலாட்டுப் பாடுகிறாள். இக் காட்சியை அருணகிரிநாதர் எடுத்துக் காட்டுகிறார்.

"அலைமுகந்தவழ்ந்து
சினைமுதிர்ந்த சங்கம்
அலறிவந்து கஞ்ச —
மலர்மீதே
அளிகலந்தி ங்க
இசையுடன் துயின்ற
அரிய செந்தில் வந்த —
பெருமாளே.

ஒரு நாட்டின் கண்ணே தடாகத்திலே அலராத

தொடர்ச்சி 4ம் பக்கம்

உ

# ஓர் விண்ணப்பம்

மறவன்புலோவிலுள்ள கோயிலாக்கண்டி சிவன் கோயில் அநேக வருடங்களாகக் கிலமடைந்து பூசை முதலிய நியமங்கள் இன்றியிருக்கின்றது. அதன் தர்மகர்த்தாக்கள் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாருக்குச் சாதனமூலம் அக்கோயிலின் பரிபாலனத்தை ஒப்படைத்துவிட்டார்கள். இதன் புனருத்தாரணத்துக்கு ரூ. 8000/= வரை தேவை. ஆகவே சைவச் சீலர்கள் யாவரையும் இச்சிவ கைங்கரியத்துக்குத் தங்களாலியன்ற பணவுதவி புரியுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

த. முத்துச்சாமிப்பிள்ளை,
தலைவர்

முகாந்திரம் இ. பொ. இராசையா,
தனாதிகாரி,

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.

ஆ. தனபாலசிங்கம்,
செயலாளர்.

# தாயாரின் தாலாட்டு

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

செங்கழுநீர் மொட்டுக்கள் அநேகம் இருந்தன. இரவில் நீர்வாழும் பறவைக் குஞ்சு ஒன்று அந்தச் செங்கழுநீர் மொட்டுக்களைப் பார்க்கின்றது. அதற்கு அந்த மொட்டுக்கள் பாம்பினது தலைபோலத் தோற்றுகிறது. அதனாலே அக்குஞ்சு அழுகிறது. பிள்ளை அழுதால் தாய்க்குத்தானே கவலை. அதுவும் இரவு நேரம் நித்திரை கொள்ள வேண்டிய நேரத்தில் அழுகிறது. தாலாட்டினால் குஞ்சு நித்திரை கொள்ளும் எனத் தாய்ப்பறவை கருதித் தாலாட்டுகிறது. இக்காட்சியைப் புகழேந்திப் புலவர் "செங்கழுநீர் மொட்டை அரவின் பசுந்தலையென் றஞ்சி — இரவெல்லாம் பிள்ளை குருகிரங்கப் பேதைப் புன் தாலாட்டும்" என்னும் வெண்பா அடிகளால் எடுத்துக் காட்டுகிறார்.

பிறையைக் குழவித் திங்கள் என்று கூறுவதுண்டு. அந்தப் பிறையாகிய குழந்தையை சோலையாகிய அன்னை தாலாட்டுகின்றான். மரங்களாகிய கரங்களால் அணைத்து தேன் என்று சொல்லப்படும் எண்ணெயை வார்த்து மகரந்தப் பொட்டிட்டிட்டு, மலரென்னும் தொட்டிலில் இட்டு வண்டுகளின் இசையைக் கேட்டு துயிலும்படியாக தொட்டிலை அசைக்கின்றன. இக்காட்சியை நாம் அரசகேசரிஇயற்றியஇரகுவம்சத்தில் காண்கிறோம்.

திருக்கோவலூர் என்ற இடத்தின் கண்ணே சோலையில் உள்ள வண்டுகள் இசை பாட அதைக் கேட்டு கரும்புகள் கண் வளருகின்றன. அவ்வாறான சிறப்புடைய சோலை சூழ்ந்த திருக்கோவலூரில் ஈசனைக் கண்டதாக பெரியாழ்வார் பாடுகிறார்.

"கோங் கரும்பு சுரபுன்
னைக் குரவார் சோலைக்
குழாவரி வண்டிசைபாடும்
பாடல் கேட்டு
தீங்கரும்பு கண்வளரும்
கழனி சூழ்ந்த
திருக்கோவ லூரதனின்
கண்டேன் யானே"

வேங்கை மரங்கள் மிகுதியாயுள்ளது ஒரு சோலை மலர் கீழே மிக அதிகமாக உதிர்ந்து பூமியை மறைத்தது. அவ்விடத்தை ஒரு மலர்ப்பள்ளியாக்கிவிடுகின்றது. யானை ஒன்று பிடியுடன் சயனித்தற்கு அதுவே நல்ல இடம் எனக் கருதுகிறது. தாலாட்டுடன் தான். இக் காட்சியையும் பெரியாழ்வாரே சுட்டிக் காட்டுகிறார்.

"......கடிகொள் வேங்கை
யின் நறுமல ரமளியின்
மணியறை மிசைவேழம்
பிடியினோடு வண்டிசை
சொலத் துயில்கொளும்"

தாலாட்டு என்பது குழந்தைகட்குச் சோகத்தை நீக்கி இன்பமளிக்கும் ஓர் மருந்து. நாமும் தாலாட்டைப்பற்றிய இலக்கியத்தைப் படிப்பதினால் ஆனந்தமடைவோமாக.

---

## தமிழ் மொழிபற்றி மகாநாடுகள்

—0—

நியாயமான அளவுக்குத் தமிழ் மொழியை எவ்வாறு உபயோகிக்கலாம் என்று ஆராய்ந்து தீர்மானித்தற்கு முதல்மந்திரி ஸ்ரீ பண்டாரநாயக தமிழ்த் தலைவர்களை ஓர் வட்டமேசை மகாநாட்டுக்கு அழைப்பாராம். அந்த அழைப்பை அவர்கள் ஏற்றுச் சமுகமளிக்க மறுத்தால் அரசியல் தலைவர்களை விட்டு ஏனையோரை அழைத்து ஆலோசிப்பாராம். தமிழ் மொழிக்குச் சம உரிமையே யன்றி வேறெந்த நிலைமையையும் ஏற்றுக் கொள்ள முடியாதென்று தமிழரசுக் கட்சியார், தமிழர் மகாநாட்டார் முதலிய கட்சியினர் வற்புறுத்தியுள்ளனர்.

# முந்திரிகைப் பழச் செய்கை

———:0:———

## விரும்பத்தக்க பெரும் வருவாய் தருவது

## இலங்கையிலும் செய்யத் தக்கது

இந்தியாவில் 1420 ஏக்கர் நிலத்தில் முந்திரிகைச்செடி உண்டாக்கி ஆண்டுதோறும் பன்னிரண்டு கோடி ரூபாவுக்கு முந்திரிகைப் பழம் விற்கப்படுகின்றது. இவ்வருவாயைப் பார்க்குமிடத்து, இச் செய்கையில் விருப்பமுடையோர் இதை ஓர் ஓய்வுநேர வேலையாகச் செய்தாலுமே இது பெரும் இலாபந்தரும் ஓர் தொழிலாயமைவதைக் காணலாம். ஒரு ஏக்கர் முந்திரிகைச் செடித்தோட்டத்தில் 10000 இறாத்தல் தொடக்கம் 15,000 இறாத்தல் முந்திரிகைப் பழத்தைப் பெறலாகும். இது 7,500 தொடக்கம் 10,000 பழக்குலைகளை நிகர்க்கும். ஒரு கொடியில் 35 தொடக்கம் 50 பழக்குலைகள் வரையிற் பெறலாகுமென்று அறியத்தருகின்றனர். ஒரு ஏக்கர் நிலத்தில் உலகம் முழுவதிலும் மேலானதாகப் பெற்ற பழப்பேறு 55,000 இறாத்தலாகும்; தென் இந்தியாவில் 50,000 இறாத்தல பழம் ஒரு ஏக்கர் நிலத்திற் பெற்றுள்ளார்கள். ஒத்த சுவாத்தியத்தையுடைய நாடுகளாகிய இலங்கையிலும் இந்தியாவிலும் இப்பழச்செய்கை செய்து பார்க்கப்படவேண்டியதொன்றாகும்.

இச்செய்கையி லிருந்து முந்திரிகைப் பழத்துடன் பிறவருவாய்களும் பெறலாகும் இனிப்புப் பொருள்கள் பலநிறமைகள் ஆக்குதற்கு உதவும் பொருள்களுடன் ஒருவித பாணி எண்ணெய் முதலியவை ஆக்குதற்கு உதவும் பொருள்களும் இதிலிருந்து பெறலாகும்.

ஏனைய பழச் செய்கைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது முந்திரிகைப் பழச் செய்கையானது மிகுந்த முயற்சியாலேயேமேன்மை பெறச் செய்யக்கூடியதாகும். பெருந்தொகை ஆரம்பப் பணத்துடன் நடைமுறைச்செலவுக்குப் பெரும் பணம்தேவைப்படும். ஆனால் இதைச் செய்வோருக்குச் சிறந்த வருமானத்தையும் இலாபத்தையும் இது தரக்கூடியதாயிருக்கின்றது.

பொதுவாக, வேறெந்தப் பழக்கொடிகள் செடிகள் மரங்களிலும் கூடிய காலத்துக்கு இக்கொடி நின்று பழந்தரும். தகுந்த சுவாதியமும் சிறந்த மேற்பார்வையுமிருக்குமானால் இது ஐம்பது ஆண்டுகள் வரையில் நிலைத்திருக்கும். இதிலும் நீண்ட காலத்துக்கு நிலைத்தலுமுண்டு. அப்கானிஸ்தான், இங்கிலாந்து முதலிய இடங்களில் 18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உண்டாக்கப்பட்ட கொடிகள் இன்றும் பழம் தருவதாகச் சொல்லுகின்றனர்.

இந்தியாவிலும், இலங்கையிலும் இப்பழச் செய்கை செய்வதற்குப் பெரும் வசதி யிருப்பதாக அறியத் தருகின்றனர். ஆண்டுதோறும் இந்தியாவில் 8000 தொன் முந்திரிகைப் பழம் இறக்குமதி செய்கின்றனர்.

ஸ்ரீ இ. என். நாயர்
ஆராய்ச்சி வல்லுநர்
கொழும்பு

எனவே இச்செய்கை மேலும் மேலும் பன்மடங்கு கூட்டப்பட வேண்டியதாயிருக்கின்றது என்பது தெரியவருகின்றது. இந்தியாவின் பல பகுதிகளில் இப்பழச்செய்கைக்கு ஏற்ற நிலம் இருக்கிறதென்பதை அறியுமிடத்து மக்கள் மீதுள்ளபொறுப்பு மேலும் கூடுகின்றது.

மக்கள் நினைக்கும் அளவுக்கு இப் பழச்செய்கை கடினமானதல்ல. எந்த நிலத்திலும் இது உண்டாக்கலாம். வேரோடுதற்குநிலத்தின் மேற்பரப்பிலோ கீழிடத்திலோசேறிருக்கவேண்டும் என்னும் நியதியில்லை. வேண்டிய அளவுக்குக் கவனமாயிருந்தால் எந்த நிலத்திலும் இதை உண்டாக்கலாம். ஆனால் சிவப்புக் கறுப்புச் சேறு கலந்த நிலத்தில் உண்டாக்கினால் மிகுந்த வருவாயைப் பெறலாகும். பருமணலுடன் சிவப்பு மண்ணுள்ள நிலத்திலும் இதை உண்டாக்கலாம்.

இக்கொடிகள் நிலம் காய்ந்திருக்கும் நிலைமையிலும் பெரும் அளவுக்குப் பழுதடையாது நிலைக்கத் தக்கவை. ஆனால் தண்ணீர் தங்கி நெருக்குதலைத் தாங்கமாட்டாது. ஆகையினாலே நீர் பாயும் ஒழுங்குகள் தோட்டத்தில் தகுந்தவையாயிருத்தல் வேண்டும்.

இக்கொடிகள் புரட்டாதி ஐப்பசியிற் பூத்து மாசி தொடக்கம் சித்திரை வரையிற் பழம் பெறக்கூடியவையாயிருக்கின்றன. சில இடங்களிற் சிறிது காலம் கூடுவதுமுண்டு. ஈரத்தன்மையில்லாது நிலம் காய்ந்து சிறிது சூட்டுத்தன்மையுமிருந்தால் குறித்த காலஎல்லைக்குள் பழம் தகுந்த நிலைமையை அடையும்.

தண்ணீர் இறைக்கக்கூடுமானால் பழம் பெறும்காலத்தை நீடிக்கச் செய்யலாம். ஆனால் தண்ணீர் தங்குதல் தவிர்க்கப்படுதல் வேண்டும். அல்லது தண்ணீர் வேரை அழித்துவிடும்.

நல்ல நிலைமையிலுள்ள கொடி இயல்பாகவே விரைவில் வளர்ந்து பல கிளைகளுடன் பரவுகின்றது. வேண்டிய அளவுக்கு அவை நறுக்கப்படுதல் வேண்டும்.

இக் கொடிகளுக்குப் பல நோய்கள் உண்டாதலுமுண்டு. ஆனால் அவை பூக்கத் தொடங்குமுன் துரிசுக் கலவையைத் தெளித்துப் பூச்சி புழுக்களால் வரும் கெடுதியை நீக்கிக்கொள்ளலாம். ஆயினும் வேண்டிய பாதுகாப்பை முன்னரே செய்தல் வேண்டும். பழமரங்களுக்குப் பல கெடுதிகளுண்டென்பதைக் கமக்காரர் அறிவார்களாகையினாலே இப்பழக்கொடிக்குக் கூடுதலான கவனம் வேண்டுமென்பது சொல்லாமலே அமைகின்றது.

---

## மாணுக்கர் மதிவள மன்றம்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

வை வீட்டுக்கு. பரவைக்கு மகாசந்தோஷம்! வணங்கினாள் பதியை. கையிற்பிடித்துக் கொண்டு வீட்டுக்குள்ளே போனார். பேசவும் வேண்டுமோ பிரிந்தவர் கூடினால்.

**கலிக்காமர் கோபங் களைந்தருள் புரிதல்**

திருப்பெருமங்கலத்திலே கலிக்காமர் என்று ஒருநாயனார். சுந்தரர், இறைவனைத் தூதாக அனுப்பியமை இவருக்குப் பிடிக்கவில்லை. பொறுக்க முடியவில்லை. அதனையறிந்த சுந்தரர் விண்ணப்பித்தார் சிவனுக்கு. அவர் சூலையினால் கலிக்காமரை வருத்திச் (சூலை என்பது வயிற்றினிடங் கொடுவேதனை செய்து குடைந்துமுடக்கும் ஒருவகை நோய்) "சுந்தரனாலன்றி இது தீராது" என்றருளிச் சுந்தரரை அனுப்பினார். சுந்தரர் வருகையையறிந்த அவர், வாளினாலே தம் வயிற்றைக் கிழித்து இறந்தார். வந்து பார்த்த சுந்தரர் தாமும் இறக்க விரும்பி வாளைக் கையிலெத்தார். திருவருளால் கலிக்காமர் உடனே எழுந்து வாளைக் கையிற் பிடித்தார். இருவரும் ஒருவரை யொருவர் வணங்கினர். கலிக்காமர் கோபமுங் கலைந்தது. இருவரும் திருப்புன்கூருக்குச் சென்றனர். சுந்தரர் அங்கு "அந்தணாளன் னடைக்கலம் புகுத" என்னும் பதிகமருளித் திருவாரூருக்குத் திரும்பினார். அங்கு நின்று திருநாகைக்காரோணம் சென்றுபதிகம் பாடிப் பொன் இரத்தினம் என்பன பெற்றார். கலிக்காமருந் தம்மூர்க்கு மீண்டார்.

— வளரும்

### சமூக வேறுபாடு நீக்கச் சட்டம்

சாதி முதலியவற்றால் சமூகத்திலுண்டாகும் வேறுபாடுகளை நீக்கும் சட்டப்பிரேரணை அரசாங்க மேற்சபையாரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

———

### உலக சமாதானத்துக்கு இடையூறு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

றும் அவர்கள் சாதிக்கின்றார்கள். அவர்களுடைய சம நோக்கானது அழுக்கு மனத்தாலுண்டாகும் கட்டுப் பாடுகளைத் தகர்த்தெறிந்துவிட்டு எல்லா உயிர்களிலும் எங்கும் வியாபகமாயிருக்கும் இறைவனுடன் ஐக்கியப்படுத்தும் சிறப்புடையதாயிருக்கின்றது. கதிர்களை எங்கும் பரப்பும் மெய்ஞ்ஞான ஒளியையுடையவர்களாய் அவர்களிருக்கின்றார்கள். அவர்களுடைய தொடர்பால் விடுதலையை விரும்பும் ஆன்ம ஞான வேட்கையுடைய உயிர்கள் அஞ்ஞானத்தை விளைக்கும் விலங்குகளை நீக்கி, விரும்பியவாறு விடுதலையடைகின்றன. அவ்வாறு விடுதலை பெற்றுத் தெய்வத் தன்மையடைகின்றன.

(சென்னையில் நடந்த உலகமத மகாநாட்டு வருடாந்த விழாவில் சுவாமி இராமதாசர் அவர்களால் வெளியிடப்பெற்ற கருத்துப் பொழிப்பு)

### மகா சிவராத்திரி

2-ம் பக்கத் தொடர்ச்சி

மிடையில் ஒளி வடிவாகத் தோன்றினார் சிவபெருமான். அவ்வொளி வடிவின் அடிமுடிகளைத் தேடுதற்கு முறையே அன்னமாயும் பன்றியாயும் உருவெடுத்து முயன்றனர். தாம் எடுத்த முயற்சியில் இருவரில் ஒருவரும் சித்தியடையாது இளைத்து வருந்திய பொழுது சிவபெருமான் தமது திருக்கோலத்தை அவர்களுக்குக் காட்டி அருள் புரிந்தனர். தம் செயல் எல்லாம் சிவபிரானது திருவருளாலே நடந்தன நடக்கின்றன என்றுணர்ந்தனர். இப்பேருண்மையையே இக்கதை எமக்கு உணர்த்துவதாகும்.

"அவனன்றி ஓரணுவும் அசையாது" என்றபடி சிவபிரானது திருவருளின்படியே இவ்வுலகில் நிகழும் நிகழ்ச்சிகளெல்லாம் நிகழவும் அவ்வுண்மையை யுணராது துன்பத்துக்காளாகின்றோம். மேலும் துன்பமுண்டாக்கும் வினைகளைச் செய்து மேன்மேலும் பிறவியெடுத்துத் துன்பமனுபவிக்கவேண்டியவர்களாகின்றோம். இவ்வாறு துன்பம் வளர்வதைத் தவிர்த்தற்குச் சிறந்த வழியாவது இவ்வுலகில் நிகழும் நிகழ்ச்சிகளெல்லாம் இன்பமானவையாயினென்ன துன்பமானவையாயினென்ன இறைவன் திருவருளின் வழியிலேயே நடக்கின்றன என்னும் உண்மையைக் காண்பதேயாகும். அவ்வாறு காண்பதற்கு ஒவ்வொருகணமும், ஒவ்வொரு நாளும் முயலுதலே சிறந்த முறையாகும். அவ்வாறு முயல முடியாதவிடத்தில் மாசமொருமுறை முயலும் பொருட்டே மாசச்சிவராத்திரி அனுட்டிக்கப்பெறுவது. அப்படியும் செய்ய முடியாதவிடத்து ஆண்டுக்கொருமுறையாயினும் சைவ மக்கள் ஒவ்வொருவரும் முயலுதல் பிறவிப்பயனை அடைதற்குச் செய்யவேண்டிய இன்றியமையாத் தேவையாகின்றது.

### கல்விமந்திரிமீது கண்டனப் பிரேரணை

தமிழ் மக்களின் கடைகளைப் பகிஷ்கரிக்கும்படி சிங்கள மக்களைக் கல்விமந்திரி ஸ்ரீ டபிள்யு. தகநாயக தூண்டுவதைக் கண்டிக்கும் பிரேரணை ஒன்று யாழ்ப்பாண நகரசபையிற் பிரேரிப்பதற்கு திரு கே. வி. தேவேந்திரம் முன்னறிவித்தல் கொடுத்திருக்கின்றாராம்

### திருவள்ளுவர் குருபூசை

நீர்வேலி சிவசங்கர பண்டிதர் ஞாபகார்த்த நூல்நிலையத்தில் 17-2-57 ஞாயிற்றுக்கிழமை இரவு திருவள்ளுவர் குருபூசை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. "திருவள்ளுவநாயனார்வாழ்க்கை"பற்றி திரு. கு. சண்முகநாதனவர்கள் பேசினார்கள். பிரார்த்தனையின்பின் சபையார்க்குப் பிரசாதம் வழங்கப்பட்டது

### கீரிமலை நகுலேஸ்வர ஆலய மகோற்சவம்

ஷெ மகோற்சவம் 14-2-57 தொடக்கம் 28-2-57 வரையும் இறைவன் திருவருட்டுணை கொண்டு நடைபெறும் பதினைந்து தினங்களிலும் மாலை 7 மணி தொடக்கம் 8-30 மணி வரை கூட்டுவழிபாடும் திருவிளையாடற் புராண விரிவுரைகளும் நடைபெறுகின்றன. இதனை அகில இலங்கைச் சைவமகா சபையார் சைவப்பிரசாரகர்களை நியமித்துச் சிறப்பாக நடாத்தி வருகின்றார்கள். ஆதலால் சைவமக்கள் அனைவரும் இவ்வைபவத்தில் பங்குபற்றி நகுலேசப்பெருமானின் அருளைப் பெறுக என்று குறித்த சபையார் அறியத் தருகின்றனர்.

## இந்திய — பாகிஸ்தானிய உறவு

காஷ்மீர்ப் பிணக்கால் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கு மிடையிலுள்ள உறவு நிலைமை மேன்மேலும் பழுதடைந்துகொண்டு போகின்றது. பாகிஸ்தான் ஐக்கிய நாட்டுச் சபையிற் சமர்ப்பித்த குற்றச்சாட்டுத்தொடர்பில் காஷ்மீர் நிலைமை எவ்விதமாயும் மாற்றப்படக்கூடாதென்று ஐ. நா. சபை தீர்மானித்தது. இத் தீர்மானத்துக்கு மறுமொழியாக இந்தியாவுடன் காஷ்மீர் முன்னரே இணைந்துவிட்டதென்றும், இந்தியாவிலுள்ள ஏனைய ஆட்சிகள் இந்தியாவுடன் இணைந்த முறையிலேயே காஷ்மீரும் இணைந்ததென்றும் ஐ நா. சபையில் இந்தியா கூறியிருக்கின்றது. இது இப்படியிருக்க, காஷ்மீரிலிருந்து தங்கள் படைகளை வெளியேற்றத் தாம் சம்மதிப்பதாகவும் தம்முடையபடை வெளியேறுதற்குமுன் இந்திய படை வெளியேற வேண்டுமென்றும் பாகிஸ்தான் சொல்லுகின்றது.

நான்கு வல்லரசுகள் ஸ்ரீ ஜாறிங்கை அனுப்பி இருநாடுகளுக்கு மிடையிற் சமாதானமுண்டாக்குமாறு கொண்டுவந்த பிரேரணைமீது சில திருத்தப் பிரேரணைகளை இத்தருணத்தில் கொலம்பியா கொண்டுவருகின்றது. இந்தியா முன்னரே சமர்ப்பித்த குற்றச்சாட்டை இவை குறிப்பிடுதலால் இவை இந்தியாவுக்குச் சாதகமானவையாகக் கூறப்படுகின்றது. பாகிஸ்தான் காஷ்மீர்ப்பகுதியில் இந்தியாவுக்கு எதிரான போர் முழக்கங்களும் நடைபெறுகின்றனவாம். பொதுவுடைமைநாடுகளல்லாத வேறெந்த நாடுபாகிஸ்தானைத் தாக்கினாலும்அமெரிக்கா உதவி புரிய மாட்டாதென்று இத்தொடர்பிற்கூறப்படுகின்றது.

### திருக்கேதீச்சரத்தில் உற்சவாரம்பம்

திருக்கேதீச்சரத்தில் வருடந்தோறும் உற்சவஞ் செய்தல் பற்றி யாழ்ப்பாணத்தில் நடந்த கூட்டமொன்றில் ஆலோசிக்கப்பட்டதாம். அப்படிச் செய்தல் தக்கதென்றும் அது சித்திரை மாசத்தில் நடைபெறுதல் நன்றென்றும் தீர்மானம் செய்யப்பெற்றது

— —

### திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரி

—O—

(27-2-57 புதன்கிழமை)

திருக்கேதீச்சரத்தில் மாசி 16 உ புதன்கிழமை வழக்கம்போல் சிவராத்திரி விரதானுட்டானம் நடைபெறும். சைவப் பேரறிஞர்களின் பேருரைகள் கதாப்பிரசங்கங்கள் பக்திப் பாடல்கள் முதலியவற்றுடன் விசேட உற்சவம் நடைபெற்று அடுத்த நாள் காலையில் தீர்த்தோற்சவம் முதலியனவும் சிறப்பாக நடைபெறும்.

### சுவாமி விவேகானந்த ஜெயந்தி

——

ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தா அவர்களின் ஜயந்திவிழா கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் மாசி ௧௧, ௧௨, ௧௩, ௧௪ உ (22, 23, 24, 25-2-57 வெள்ளி, சனி, ஞாயிறு திங்கட்கிழமைகளில் சிறப்பாக நடைபெறும்.

பேரறிஞர்களின் பெருஞ் சொற்பொழிவுகளும் கதாப் பிரசங்கம் இன்னிசைவிருந்து முதலியனவும்மிகச் சிறப்பாக நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

சபைச் செயலாளர் அனைவரையும் அன்பாய் அழைக்கின்றனர்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

—:—

இல, 13254
1 S. முத்துக்குமாரசாமி
1 S. ருசேந்திரம்
— மானிப்பாய் வழக்காளிகள்
எதிர்
பக்கீர் மொகிடீன் கச்சு மொகமது வண்ணார்பண்ணை மேற்கு
எதிராளி

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் 13254 ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1957 ௵ சித்திரை மீ 6 உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம், அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபாய் 1157 ரூபா 1000 க்கு 15 7.38 தொடக்கம் பணம் கொடுக்கும் வரைக்கும் 12 வீத வட்டியும் கோட்டுச்செலவும் இதில் ரூபாய் 600 கொடுபட்டிருக்கு.

காணி விபரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கில் புங்கடி என்னுங் காணி கே. இ. 7 3/8 வீடும் தெற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் வான்பயிர் செய்பயிர்களும்.

எல்லை கிழக்கு மீராசாகிப் மொகிடீன் சாகிப்
வடக்கு மொகிடீன்கண்டு பவா மொகிடீன் பக்கீர் மொகிடீன் பெண் மொகமதகனி
மேற்கு ரோட்டிலிருந்து இந்தக் காணிக்குப் போகும் கையொழுங்கை இந்தக் காணியிலிருந்து அடம்பவா மீரான்கண்டுவின் ஆதனத்துக்குப் போகும் ஒழுங்கையும்.
தெற்கு அடம்பவா மீரான் கண்டு
இவை அடங்கிலும்

வ. அ. துரையப்பா
கொமிஷனர்.

யாழ்ப்பாணம்
13-1-57.
M 471 22-2-57. (து 100)

உ
சிவமயம்

## சிவராத்திரி வழிபாடு

நிகழும் துர்முகி ௵ மாசி மீ ௧௬ உ (27-2-57) புதன்கிழமை இரவு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆதரவில் ஷெ சபை நாவலர் மண்டபத்தில் சிவாராத்திரி வழிபாடு கீழ்க்காணும் கிரமப்படி (நான்கு யாமங்களிலும் நடராசப்பெருமானுக்கு விஷேச பூசை செய்து) நடத்தப்படும்.

நிகழ்ச்சிகள்:

இரவு 7½ மணி கூட்டுப்பிரார்த்தனை திரு. க. ஆனந்தநடராசாவும் அவரது கோஷ்டியினரும்
" 9 விசேஷ ஆராதனை
தமிழ்மறையோதல் — ஸ்ரீமத் சி. கலியாணசுந்தரக்குருக்கள்
12 மணி விசேஷ பூசை
ஸ்ரீ உருத்திர வேதபாராயணம்
வியாகரண சிரோன்மணி பிரம்மஸ்ரீ கி. நாராயணசர்மா
உபந்நியாசம்: "அடியார் பெருமை" திரு. சி. கணபதிப்பிள்ளை
"அருச்சுனன் தவநிலை" திரு. வே. சோமசுந்தரம்
" 3 மணி விசேஷ பூசை
புராணபடனம் கந்தபுராணம் அடிமுடி தேடுபடலம்.
" 5 மணி விசேஷ பூசை.

சிவனடியார்கள் யாவரும் சமுகமளித்து நிகழ்ச்சிகளில் பங்குபற்றி சிவபெருமான் அநுக்கிரகத்தைப் பெறுவார்களாக.

சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 20-2-57.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,

## திருவள்ளுவர் திருநாள்

———0———

சைவமகாசபை
காரைநகர்

சென்ற (17-2-57) ஞாயிற்றுக்கிழமை மாலை திருவள்ளுவ நாயனாரின் குருபூசை மிகச்சிறப்பாக மேற்படிசபையின் ஆதரவில், சபை மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. மலர்களால் அலங்கரிக்கப்பட்ட நாயனாரின் திருவுருவப்படத்திற்கு ஆராதனை மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது.

இதன்பின் சபைத்தலைவர் திரு. இ. நாகலிங்கமவர்கள் தலைமை உரையில் நாயனாரைப்பற்றி ஓர் சுருக்கமான சொற்பொழிவு நிகழ்த்தினர்.

அகில இலங்கைத் திருக்குறட் போட்டியில் வெற்றிபெற்றுத் தங்கப் பதக்கம் பெற்றவரும், "வள்ளுவர் வாய்மொழி மாண்பு" எனும் நூலை எழுதியவருமாகிய ஆசிரியர் திரு வெ. ஐயம்பிள்ளை அவர்கள் திருவள்ளுவ நாயனாரின் சரித்திரம் பற்றிப் பேசும்போது பல குறட்பாக்களை ஆதாரமாகக்கொண்டு பக்திப் பரவசத்துடன் மிக்க ஆர்வத்தோடும் ஆவேசத்துடனும் விளக்கிக்காட்டி ஓரரிய சொற்பொழிவாற்றினர்.

இதன் பின்னர் சைவ அறிஞரும், சைவப் பிரசாரகருமாகிய திரு.வே. அருளம்பலம் அவர்கள் நாயனார் நடாத்திய இல்லற வாழ்க்கையைப்பற்றியும் அவர் இயற்றிய திருக்குறளின் மகிமையைப் பற்றியும் ஓர் சிறுசொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

ஆசிரியர் திரு. நா. செல்லையா அவர்கள் குறிப்புரை கூறினர். ஈற்றில் சபைக் காரியதரிசி திரு. அ. நாகலிங்கம் அவர்கள் சில குறிப்புரைகள்கூறி அன்று சமுகமளித்தவர்களுக்கு நன்றி கூறியபின்னர் தேவார பாராயணத்தோடு விழாப் பூர்த்தியாயிற்று.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 313
கந்தையா கனகரத்தினம்
கந்தர்மடம், வண் கிழக்கு
வழக்காளி.

எதிர்

1. கிறிஸ்ணபிள்ளை
துரைசிங்கமும் பெண்
2. ஈஸ்வரியம்மா - நல்லூரர்
யாழ்ப்பாணம்
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் M B 313 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்தகோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1957௵ சித்திரை ீ 13௳ (13-4-57)சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்றுபிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— ரூபா 5490-62. 21-6-1955 தொடக்கம் 22-9-55 முடிய ரூபாய் 3500/- க்கு பத்துவீத வட்டியும் அதன்பின் ஐந்துவீத வட்டியும் கோட்டுச் செலவு 253-15 இதில் ரூபா 150-/ கொடுபட்டது,

காணி விபரம்

யாழ்ப்பாணம் நல்லூரில் கயிலாயஉடையான் வளவு என்னும் காணி ந இ 4, 5/48, பயிர்களும் கிழக்கெல்லை காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும் வழி வாய்க்கால் உருத்தும் மற்றும் அதற்கு சேர்ந்தவைகளும்.

எல்லைகிழக்கு சண்ணுமுகம் பிள்ளைபெண் இராசம்மாவின் ஆதனம்.

வடக்கு ஒழுங்கை
மேற்கு ஒழுங்கை
தெற்கு குளம்
இவை அடங்கிலும்,

கோப்பாய் தெற்கில் காலிங்கருயன் வயல் இரண்டு பிரிவுகள் செ. இ 15.

எல்லை கிழக்கு விசுவநாதர் வேலுப்பிள்ளையின் உருத்தாளர்
தெற்கு செல்லப்பா கணபதிப் பிள்ளையும் கனகசபை கைம்பெண் சொர்னம்மாவும்
மேற்கு நல்லூர் கிராம எல்லை.
வடகது செல்லப்பா கணபதிம்பிள்ளை. இவை அடங்கிலும்.

வ. அ. துரையப்பா
கொமிஷனர்

யாழ்ப்பாணம்
18-2-57.
M, 470 22-2 (து.100)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கரம்பன் இப்போ கொழும்பு கொள்ளுப்பிட்டி

செல்லையா நச்சி
வழக்காளி.

இல. M B 201

எதிராக

1. ஊர்காவற்றுறை மேற்கு பருத்தியடைப்பு தம்பாபிள்ளை கெங்காதரமும் பெண்
2. ஷை இராசமணியும்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 201ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல்விபரிக்கப்படும் துண்டுக் காணி 1957௵ பங்குனி ீ 23 உ சனிக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 1788-94 இதில் ரூபா 1416-25 க்கு 28-4-55 திகதி தொடக்கம் 13-7-55 வரைக்கும் வருடமொன்றுக்கு 100 க்கு 6 வீத வட்டியும் அதன் முழுத் தொகைக்கும் 13-7-55 தொடக்கம் இறுககும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 191-00. இதில் ரூபா 500/= கொடுபட்டது.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோயிற்பற்று கரம்பன் இறை ஊருண்டி நிலப்பரப்பு ஐம்பத்து நாலு (54)ம் பனைகள் வடலிகள் தென்னைகள் கிணறுகளும் எல்லை கிழக்கு பிள்ளையான் சின்னத்தப்பியினுதனம். வடக்கு ஐசெக் தம்பையாவினுரிமைககாறரினுதனம். மேற்கும் தெற்கும் ஒழுங்கை. இந்தெல்லைக்குட்பட்ட காணியடங்கலும்.

ஆ. ச. கந்தையா
கொம்மிஷனர்

காரைநகர்
23-1-57
M 469 22-2-57 (து 50)

## விளம்பரம்

சாவகச்சேரி றிக்குவெஸ்ட் கோட்டில்
இல. 862
நுணுவில் றிக்கிறியேஷன் கிளப் தலைவர் நுணுவில் கனகசபை விசுவலிங்கம் தனக்காகவும் குறித்த கிளப்பின் மற்ற அங்கத்தவர்களுக்காகவும்
வழக்காளி

எதிராக

நுணுவில் கிழக்கு மாணிக்கம் மயில்வாகனம் — எதிராளி

நுணுவில் றிக்கிறியேஷன் கிளப் தலைவர் நுணுவில் கனகசபை விசுவலிங்கம் மேற்குறித்த இலக்க வழக்கு 1955-ம் ஆண்டு குறித்த கிளப்பின் உபகாரியதரிசியாகவிருந்த நுணுவில் மாணிக்கம் மயில்வாகனத்துக்கெதிராக அவர் அபகரித்ததும் இதன்கீழ் அட்டவணையிலிருப்பதுமான ரூபா 2075 பெறுமதியான தளபாடப் பொருட்களை அல்லது அவற்றின் பெறுமதி ரூபா 207 ஐ அறவிடுவதற்காகத் தொடரப்பட்டிருக்கிறது. இவ்வழக்கைத் தொடருவதற்கு வேண்டிய உரித்தும் தத்துவமுங் கொண்டதும் 1955-ம் ஆண்டு மார்கழி ீ 11-ந் திகதியைக் கொண்டதுமான குறித்த கிளப்பின் கிருவாகசபையின் தீர்மானத்தின்படி குறித்த வழக்காளி இவ்வழக்கைத் தொடர்ந்திருக்கிருர்.

இவ்வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதைப்பற்றி குறித்த கிளப்பின் அங்கத்தவர்கள் யாபேருக்கும் இத்தால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. நுணுவில் றிக்கிறியேஷன் கிளப்புககாக இவ்வழக்கின் இறுதிவரை குறிதத கனகசபை விசுவலிங்கம் வழக்காளியாகத் தொடர்ந்து நடத்துவார்.

பொருட்களின் இடாப்பு

1 ஒருமேசை
2 மூன்று வாங்குகள்
3 ஒரு கதிரை
4 ஒரு அலுமாரி
5 ஒரு கதவு நிலை
6 ஒரு யேல் ஆமைப்பூட்டு

எல்லாமாகப் பெறுமதி ரூபா 270

கோட்டுக் கட்டளைப்படி
Sgd C. Sathasivam
பிரதம லிகிதர்
(ஒப்பம்) சி. சிவராசா
வழக்காளியின் வழக்கறிஞரால் தயாரிக்கப்பட்டது.
18 February 1957.
O 331 27-2, 1-3

## அரசியல் அலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொழுது ம. ஐ. மு. கொழும்பு மாநகரசங்கத்திலே சிங்கள மொழியை நடைமுறை மொழியாக்க முயற்சிக்கின்றதாம்—இதுதான் தமிழுக்கு நியாயமான இடம் வழங்குகின்ற கொள்கையின் உண்மைத் தோற்றம் — இந்தப் பட்சபாதக முயற்சியை வலதுசாரிகள் முறியடிக்க முயன்று வருவதாகச் செய்திகள் கூறுகின்றன. ஐ. தே. க. புத்தி அறிந்துவிட ம. ஐ. முன்னணிக்குப் புத்தி மத்திமமாய் மழுங்குகின்றதே!

## ஒருகோடி ரூபா

தமிழ்ச் சர்வகலாசாலை இயக்கத் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ ஏ. டபிள்யூ மயில்வாகனம் அவர்கள் தமிழ்ச் சர்வகலாசாலை அமைப்புப்பற்றிப் பேராசிரியர் சேர் ஐவர் ஜென்னிங்ஸ் அவர்களின் கருத்தைக் கேட்டபொழுது ரூபா ஒரு கோடி அதற்கு வேண்டப்படுமென்று அவர் குறிப்பிட்டிருக்கின்றாராம். சர்வகலாசாலைக்கு வேண்டப்படும் பொருள்களைப் பெறுதற்கும் பெருந்தொகைப் பணம் வேண்டுமாம்.







யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கோடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிருப்பர்

Std 14



# கம்பராமாயணம்

(யுத்தகாண்டம்)

## கும்பகருணன் வதைப்படலம்

(ஒன்று முதல் 170 பாட்டுக்கள்)

— யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையின் வெளியீடு —

பரமேசுவரக் கல்லூரித் தமிழ்விரிவுரையாளர்,
வித்துவான், பண்டிதர், சைவப்புலவர், க. வேந்தனுர் அவர்கள் எழுதிய
விளக்கவுரையுடன் வெளி வந்துவிட்டது

- ஒவ்வொரு பாட்டிற்கும், கொண்டு கூட்டு, பொருள், பொழிப்பு, விளக்கம், குறிப்பு எனும் உறுப்புகள் அமைய உரை எழுதப்பட்டுள்ளது.
- விளக்கத்தில் செய்யுள் நயம் விரிக்கப்படுகின்றது. செய்யுளை உணர்ந்து உணர்ந்து தீட்டிய உரை நயம் மாணவர்க்கு நல் விருந்தாகும்.
- உவமான உவமேய விளக்கம், மாணவர் உள்ளத்தில் பதியக் கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளது.

இத்துடன்,

170 பாட்டுக்களையும் அவற்றின் பொருள்நிலைக்கு ஏற்பப் பத்தொன்பது பிரிவுகளாக வகுத்து, அப்பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி தலையங்கங்கள் கொடுத்துப் பின் ஒவ்வொரு பிரிவுகளின் கீழ் உள்ள பாட்டுக்களின் பொருளையும் தொகுத்துத் தெளிவான உரைநடையில் எழுதப்பட்டுள்ளது. இதனுல் மாணவர்கள் மிக எளிதாகப் பாட்டின் பொருளை விளங்கிக்கொள்வார்கள்.

மாணவர்கள் தாமாகவே படித்து, இலக்கியத்தை நயத்தற்கு வழிகாட்டும் வாய்ப்பான உரை.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையாஅவர்களால் 22.2.57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.